முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.12.02.2025

O.S.No. 168 / 2021

வா.சா.1 ஏசுநேசன்

2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை

1) நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்தேன். அதன் விவரங்கள் எனக்கு தெரியும். வா.சா.ஆ.2 மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளருக்கு அனுப்பியதாக உள்ளது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் பலமுறை மனு கொடுத்ததாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் அனுப்பப்பட்டதாக அதில் உள்ள பெறுநர் பெற்றுக்கொண்டதாகவும் காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.4 புகைப்படத்தை யார் எடுத்தது என்றால் முதலில் இருந்த வழக்கறிஞருக்குத்தான் தெரியும். வா.சா.ஆ.4 புகைப்படம் தெளிவில்லாமல் உள்ளது என்றால் பல ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆனது வா.சா.ஆ.1ற்கு கொடுக்கப்பட்ட பதில் என்றால் சரிதான். வா.சா.ஆ-6 ஆவணம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல நான் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சென்று கேட்டேன். வா.சா.ஆ-6 ஆவணத்தில் தமிழ்நாடு நீர் மாசுக்கட்டுப்பட்டு சட்டம் மற்றும் தமிழ்நாடு காற்று மாசு கட்டுப்பாட்டு சட்டம் ஆகியவற்றிற்கு கீழ் இசைவு ஆணை வழங்கும் பழக்கம் இல்லை என தெரிவித்துள்ளார்கள் என்றால் எந்த அலுவலகத்தில் இருந்து இசைவு ஆணை வழங்கவில்லை என சொல்லியுள்ளார்கள்.

3) வா.சா.ஆ.7 கடிதம் எனக்கு அனுப்பி அதன் நகல் கரும்பாட்டு ஊராட்சி மன்ற தலைவருக்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் அது சம்பந்தமாக ஊராட்சிமன்ற தலைவரை கேட்டேன். அவர் அனுமதி வழங்கவில்லை என தெரிவித்தார். 2, 3 பிரதிவாதிகள் நான் கொடுத்த மனுவிற்கு முறைப்படி நடவடிக்கை

எடுத்தார்கள் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் என்னை தவிர வேறு யாரும் 1ம் பிரதிவாதி பட்டறை நடத்துவது இடையூறாக இருப்பதாக புகார் கொடுக்கவில்லை என்றால் எங்களுக்குத்தான் இடையூறாக உள்ளது. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு முறைப்படி அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் வழக்கறிஞர் அனுப்பியிருப்பார். நான் தாமசிப்பதுபோல் எங்கள் ஊரில் நிறைய நபர்கள் தாமசிக்கிறார்கள் என்றாலும் அவர்களுக்கு 1ம் பிரதிவாதி பட்டறையால் எந்த பாதிப்பும் இல்லை என்பதால் அவர்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல மற்றவர்களுக்கும் பாதிப்பு உள்ளது. அவர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கலாம். நான் 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் உள்ள தனிப்பட்ட விரோதத்தின் காரணங்களுக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் 2, 3 பிரதிவாதிகள் இந்த வழக்கில் அவசிய தரப்பினல் இல்லை என்றாலும் சரியல்ல.

4) இந்த வழக்கில் தேவையான தரப்பினரை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கும் 2, 3 பிரதிவாதிகளுக்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கும் 1ம் பிரதிவாதிக்கம்தான் பிரச்சனை என்றால் சரிதான். நான் வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் தேவையில்லாத தரப்பினர் என்பதால் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.